மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.13/2023</u>

2026ம் ஆண்டு மார்ச் 05ம் நாள் வியாழக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பூங்கோதை | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>05.03.2026 வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. 572 காலைக்கு வடபுறம் நத்தக்காட்டுவலசு வழக்கிலிருந்து கலைஞர் காலனி செல்லும் கிழமேல் தார் ரோடு உள்ளது என்றால் சரிதான். பழனிச்சாமி கவுண்டரின் வாரிசுகளான சுப்பராய கவுண்டர் மற்றும் நாச்சிமுத்து கவுண்டரின் வாரிசுகள் 572 காலையில் கிழக்கோட்டில் அமைந்துள்ள இட்டேரியில் இருந்து வடக்காக சென்று நத்தக்காட்டு வலசில் இருந்து கலைஞர் காலனி செல்லும் கிழமேல் தார் ரோடு வழியாக 572 காலைக்கு வந்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. இரண்டு ரோடுகளும் இணையவில்லை.

2. 572 காலையில் வடபுறத்தில் கிழமேல் தார் ரோடு உள்ளதாக நான் ஒப்புக்கொண்டு விட்டு தற்போது சுதாரித்துக் கொண்டு தார் சாலையின் வழியாக காலை எண்.572க்கு வர முடியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் நீதிமன்ற

ஆணையரை அழைத்துச் சென்று தாவா சொத்துக்களை காட்டிய போது 572 காலையில் கிழப்புரத்தில் உள்ள தென்வடல் இட்டேரியை நான் நீதிமன்ற ஆணையருக்கு காண்பிக்கவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 ஆவணமான பழனிச்சாமி கவுண்டர் மற்றும் நாச்சிமுத்து கவுண்டர் ஏற்படுத்திக் கொண்டுள்ள பாகப்பிரிவினை ஆவணமானது வா.சா.ஆ.1 ஆனா 1919 வருடத்திய பாகப்பிரிவினை ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ.1 ஆவணத்தில் க.ச.எண்.572 காலைக்கு சுப்புராய கவுண்டரின் வாரிசுகளான பழனிச்சாமி கவுண்டர் மற்றும் நாச்சிமுத்து கவுண்டர் ஆகியோர்களுக்கு தடபாத்தியம் எதுவும் கண்டு எழுதப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல எழுதப்பட்டுள்ளது. வா.சா.ஆ1 ஆவணத்தில் பழனிச்சாமி கவுண்டர் மற்றும் நாச்சிமுத்து கவுண்டர் ஆகியோர்களுக்கு பிரிந்த க.ச.எண்.572 பாகத்திற்கு தடபாத்தியம் எதுவும் வழங்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தில் க.ச.எண்.572 பாகத்திற்கு தட பாத்தியம்எதுவும் வழங்கப்படாத நிலையில் அதன் அடிப்படையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை ஆவணத்தில் க.ச.எண்.572 பூமிக்கு தட பாத்தியம் கண்டு எழுத எந்த உரிமையும் இல்லை என்றும் அதன் அடிப்படையில் நாங்கள் எந்த உரிமையும் கோர இயலாது என்றும் சொன்னால் சரியல்ல.

4. 572 மற்றும் 573 ஆகிய காலைகள் அருகருகே ஒட்டி அமைந்துள்ளது என்றால் சரிதான். க.ச.எண்.573 கிரயம் பெற்ற நாளிலிருந்து பிரதிவாதி 572 காலையிலிருந்து 573 காலைக்கு

சென்று வருகிறார் என்றும் அதை தடை செய்யத்தான் எங்களால் இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றும், இதுவரை 572 காலையில் இருந்து 573 காலைக்கு பிரதிவாதி செல்லவில்லை இனிமேலும் செல்லக்கூடாது என்று தான் இந்த வழக்கை போட்டுள்ளோம். நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் ஆகியவற்றில் காலை எண்.572 இல் இருந்து 573 க்கு தடம் ஏற்படுத்தப்பட்டு அனுபவம் செய்து வரப்படுவதை குறித்து சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5. சின்னா கவுண்டரின் வாரிசுகள் ஆகிய நாங்கள் 1958 இல் பாகம் செய்து கொண்டுள்ளோம் என்றால் செய்தான். அந்த பாகப்பிரிவினையில் சின்ன கவுண்டரின் வாரிசுகளுக்கு 5 ஏக்கர் அரை சென்ட் பூமி பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினையில் 572 காலையில் தெற்கு வேலி ஓரமாக தடபாத்தியம் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1919 ஆம் வருடத்திய ஆவணமான வா.சா.ஆ.1 ஆவணத்தில் சின்னா கவுண்டர் என்பவருக்கு பிரிந்த 572 பாகத்திற்கு அதே காலையில் தெற்கு வேலி ஓரமாக தட பாத்தியம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சுப்பராய கவுண்டரின் வாரிசுகளான பழனிச்சாமி கவுண்டர் மற்றும் நாச்சிமுத்து கவுண்டர் ஆகியோர்களுக்கு க.ச.எண்.572 பூமியில் தடபாத்தியம் எதுவும் வழங்கப்படாத நிலையில் 572 காலையிலிருந்து பிரதிவாதி 573 காலைக்கு செல்வதை நாங்கள் தடை செய்ய இயலாது என்று சொன்னால் சரியல்ல.

6. 572 காலையில் தடபாத்தியம் இல்லாத நபர்களான பழனிசாமி கவுண்டர் மற்றும் சுப்பராய கவுண்டரின் வாரிசுகளுடன் சேர்ந்து நான்

இந்த வழக்கை பொய்யான காரணங்கள் கூறி தாக்கல் செய்துள்ளேன் என்றும், இந்த வழக்கு தள்ளுபடியாகத் தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.03.05 19:09:40 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்